**ஊக்கியிற்கான(Uki) விண்ணப்பம்**

க.பொ.த உயர்தர பரூட்சைக்கு தோற்றிப் பல்கலைக்கழகத்திற்கோ அல்லது வேறு எந்த தொழிற்கல்விக்கோ உள்வாங்கப்படாத மாணவர்களிற்கு கணினி மென்பொருள் துறையில் இணைவதற்கும் சுயமாக ஒரு கணினிசார் வியாபாரத்தினை உருவாக்குவதற்கும் அவசியமான பயிற்சிகளை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு இந்த செயற்றிட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டமானது, கடந்த 7 வருடங்களுக்கும் மேலாக எந்தவொரு இலாபநோக்கமின்றிச் செயற்பட்டுவரும் யாழ் ஐரி ஹப் (Yarl IT Hub) இனதும் கடந்த 6 வருடங்களாக வடமாகாணத்தில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக உழைக்கும் ITEE பவுண்டேசன் (ITEE Foundation)இனதும் புதியதொரு கூட்டு முயற்சியாகும்.

இச்செயற்றிட்டத்தினை இலங்கையின் முன்னணி மென்பொருள் அபிவிருத்தி நிறுவனங்கள் பலவற்றுடன் இணைந்து யாழ் ஐரி ஹப் முன்னெடுக்கிறது. இதனால் பயிலும் மாணவர்கள் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் குறித்த மென்பொருள் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த 6 மாத முழுநேர பயிற்சிநெறியானது 100% புலமைப் பரிசில் அடிப்படையிலானதொன்றாகும். தகுதிபெறும் மாணவர்கள் இப்பயிற்சிநெறியினை இலவசமாகப் பயில முடியும்.

இப்பயிற்சிநெறியில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

1. Programming-Full stack development
2. அடிப்படை வணிகம் ( Basic business skills)
3. பேச்சு ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன் (Spoken English and communication skills )
4. தனியாள் வழிகாட்டல் ( Personal Coaching )

இச்செயற்றிட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் ஒரு IT நிறுவனத்தில் இளைய நிர்வாகியாக வேலை செய்வதற்கோ, ஒரு தொழில்நுட்ப சுயமுயற்சியாண்மையை தொடங்குவதற்கோ அல்லது சுயமுயற்சியாண்மையின் இணை நிறுவுனராக உருவாகுவதற்கோ தேவையான அறிவையும், திறமைகளையும் பெற்றிருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

- பங்குபெற விரும்புபவர்கள் இவ் கற்கை நெறி காலமான 6 மாத காலமும் வாரத்துக்கு 48 மணித்தியாலம் வீதம் பங்கு பெற தயாராக இருத்தல் வேண்டும்
- செயற்பாட்டு கால முடிவில் பொருத்தமான வேலை வாய்ப்பினை பெறும் முகமாகவோ அல்லது சுயமுயற்சியாண்மை நிறுவுனராகவோ அல்லது இணை நிறுவுனராகவோ வரும் பொருட்டு நேர்முகத்தேர்வினை எதிர்கொள்ள வேண்டும்.
- பங்கு பெறுபவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி பரீட்சை முடிவுகளை பெற்று எந்தவொரு அரசாங்க மற்றும் தனியார் பட்டப்படிப்புக்கும் தெரிவுசெய்யப்பட்டு இருத்தல் கூடாது அத்துடன் சரியான அணுகுமுறை மற்றும் மனப்பாங்கும் கொண்டிருத்தல் வேண்டும்.

Programming இல் முன் அனுபவம் கூடுதல் தகைமையாக கருத்தில் கொள்ளப்படும்.

- விண்ணப்பதாரர் 21st April 2019 அன்று 23 வயது அல்லது அதற்கு கீழ்ப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஊக்கிக்கு விண்ணப்பங்களை தெரிவு செய்வதற்கும் நிபந்தனைகளுக்கு அமைய அவற்றை நிராகரிக்கவும் முழு அதிகாரம் உள்ளது.

உங்களால் இங்கு தரப்படும் அனைத்து விபரங்களும் ஊக்கி உறுப்பினர்களால் அந்தரங்கமாக பேணப்படும் என்பதை உறுதியாக தெரிவித்து கொள்கின்றோம்.

**2019 April 21ம்** திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்ப படிவங்கள் மட்டுமே ஊக்கி குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முற்று முழுதாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை apply@uki.life என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அல்லது

**124, ராசாவின் தோட்டம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை** என்னும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள http://uki.life/ எனும் இணையத்தளத்தை பார்வையிடவும் அல்லது தொலைபேசி மூலமாகவோ, மின் அஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளவும்.

Email: info@uki.life Phone: 0775694587

## பொதுவான விபரங்கள்

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: (NIC இல் உள்ளவாறு) | | |
| பிறந்த திகதி: | | ☐ ஆண் பெண் ☐ |
| முகவரி: | | |
| தொலைபேசி: | | கைத்தொலைபேசி: |
| மின்னஞ்சல் முகவரி: | | |
| அடையாள அட்டை இல: | | |
| கல்வி கற்ற பாடசாலை : | | |

**க.பொ.த உ/தர பெறுபேறுகள்**

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| பொது ஆங்கிலம்: | |
| தகவல் தொழில்நுட்பம்: | |

**க.பொ.த சா/தர பெறுபேறுகள்**

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ஏனைய கற்கைநெறிகள்(IT,ஆங்கிலம் அல்லது வேறு):

உங்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் ஏனைய தேர்ச்சிகளை குறிப்பிடுக:

**குடும்ப பின்னணி**

| | |
|---|---|
| தந்தையின் முழுப்பெயர்: | |
| தந்தையின் தொழில் | |
| தந்தையின் கல்வித்தகைமை: | |
| தாயின் முழுப்பெயர்: | |
| தாயின் தொழில்: | |
| தாயின் கல்வித்தகைமை: | |
| குடும்பத்தினரின் அண்ணளவான வருட வருமானம் : | |
| உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் சொந்தமாக வாகனம் வைத்துள்ளார்களா? ஆம் எனில் எவ்வகையான வாகனங்கள் என பட்டியற்படுத்துக. | |
| நீங்கள் உங்கள் சொந்த வீட்டில் வசிக்கின்றீர்களா இல்லை வாடகை வீடா? | |
| நீங்கள் இச்செயற்பாட்டுக்கு தெரிவுசெய்யப்படுவீர்களேயானால் இதில் கலந்து கொள்வதற்கு நீங்கள் பயன்படுத்தப்போகும் பிரயாண முறைமை: | |

**கேள்விகள்**

**பின்வரும் கேள்விகளுக்கு தனியான ஒரு தாளில் விடையினை எழுதி விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து அனுப்புக**

1. உம்மைப்பற்றி 150 சொற்களில் குறிப்பிடுக.முடிந்தவரை ஆக்கபூர்வமான முறையில் எழுதுக.

2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பதில் உங்கள் அனுபவத்தை குறிப்பிடுக.(உங்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள், பொழுதுபோக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள், coding என்பவை பற்றி குறிப்பிடுக)

3. நீங்கள் ஈடுபடும் ஏனைய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பற்றி குறிப்பிடுக.( கதை எழுதுதல், வரைதல், பாடுதல், நடனம் முதலியன )

4. எங்களைப்பற்றி எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?

5. நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் வசிப்பவராயின் செயற்பாடு நடைபெறும் இடத்திற்கு வந்து செல்வதற்கான ஏற்பாடுகளை உங்களால் முன்னெடுக்க முடியுமா? இல்லை எனில் நீங்கள் எதிர்பார்க்கும் தேவைப்பாடுகளை குறிப்பிடுக

**சிபாரிசு செய்பவர்கள் பற்றிய விபரம்**

உங்களுக்கு மிகவும் பரிச்சயமான இரு நபர்களை தெரிவுசெய்து அவர்களின் பெயர், மின்னஞ்சல், தொலைபேசி இல. என்பவற்றை குறிப்பிடுக.

நேர்முகத்தேர்விற்கு நீங்கள் தெரிவுசெய்யப்படுவீர்களெனில் அவர்களுடன் உடன் நாங்கள் தொடர்புகொள்ளக்கூடும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**நீங்கள் சிபாரிசு செய்பவர்களின் அனுமதி பெற்றால் மாத்திரமே அவர்களின் விபரங்களை சமர்பிக்கலாம்.**

## Reference person 1:

முழுப்பெயர்:

பதவி:

நிறுவனம்/ கழகம் :

எவ்வளவு தூரம் உங்களுக்கு பரிச்சயமானவர் என குறிப்பிடுக:

மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி இலக்கம்:

## Reference person 2:

முழுப்பெயர்:

பதவி:

நிறுவனம்/ கழகம் :

எவ்வளவு தூரம் உங்களுக்கு பரிச்சயமானவர் என குறிப்பிடுக:

மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி இலக்கம்:

**பிரகடனம்**

நான்/நாம் மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் தெளிவாக வாசித்து புரிந்து கொண்ட பின்னரே கையொப்பம் இடுகின்றேன்.

இங்கு என்னால் குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஏதும் மாற்றம் ஏற்படின் அது தொடர்பான தகவல்களை 7 நாட்களுக்குள் ஊக்கி குழுவினருக்கு தெரியப்படுத்துவேன்.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் உண்மை எனவும் சரியானது எனவும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் என்னால் ஏதும் தவறான விடயங்கள் தரப்பட்டிருந்தால் என்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது என்னுடைய தெரிவு இரத்து செய்யப்படும் என்பதையும் அறிவேன்.

________________________ ________________

மாணவர் கையொப்பம் திகதி

அதிபர்/அதிகாரபூர்வமான நபர்

______________________________

கையொப்பம்

முழுப்பெயர்: ________________________

திகதி : ________________________

*தங்குமிடம் மற்றும் பிரயாணத்திற்கான எந்தவொரு கொடுப்பனவுகளும் வழங்கப்படாது. Coding accelerator program மட்டுமே இலவசமாக மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு நபரிடம் இருந்து உங்களைப்பற்றிய அபிப்பிராயம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் விண்ணப்பதாரியால் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான தகவல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறிப்பு நபர் ஒரு NGO ஆகவோ/ பொதுமக்கள் முகவராகவோ/ தனியார் முயற்சியாளராகவோ அல்லது வேறு ஒரு துறையை சார்ந்தவராகவும் இருக்கலாம்.
குறிப்பு நபரின் பதவி கவனத்தில் கொள்ளப்படாது, தொழில்சார் முறையில் தனிப்பட்ட ரீதியில் உங்களை எந்த அளவிற்கு தெரிந்து வைத்திருக்கிறார் என்பதே கருத்தில் கொள்ளப்படும்.